Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 28 இதழ் - 9 செப்டம்பர் 2015

தனிப்பிரதி ரூ.10/-



ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்.
பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.
(2 கொரிந்தியர் 5 : 17)

ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்
இணைந்து நடத்தும்

# பதினெட்டாம் வேதாகம கருத்தரங்கம்

# 18th Annual Bible Lectureship

கருப்பொருள் : " நானே..."

THEME : " I am... "

நாள் : அக்டோபர் 21, 22 – 2015 ( புதன், வியாழன் )
(அரசு விடுமுறை நாட்கள்)

Date : October 21, 22 - 2015 ( Wednesday, Thursday )

நேரம்

புதன் : காலை 8:45 - மாலை 4:45 மணி

வியாழன் : காலை 8:45 - மதியம் 1:00 மணி

இடம்

கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701 , தமிழ்நாடு.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.


## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. ஏன் நாங்கள் புதிய பிறப்பு பற்றி ... 12
3. பெண்கள் பகுதி 16
4. வாலிபர் பகுதி 19
5. சிறுவர் பகுதி 23
6. எல்லோரும் திருப்தியடைந்தார்கள் 25
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை 29
8. சபையும், இடறலும் 32


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- **இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.**
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 28 September - 2015 Issue - 9


ஆசிரியர் உரை

# கண்ணீர்களிலிருந்து

“கண்ணீர்” என்பது மானிடர் எல்லாருடைய கண்களிலுமிருந்து ஏதாவது ஒரு கட்டத்தில் வெளியேறும் உப்பு உறைக்கும் தண்ணீர் என்பது யாருக்கும் தெரியாத ஒன்றல்ல. இந்தக் கண்ணீர் பெரும்பாலும் அழுகை வரும்போதோ அல்லது அழும்போதோ, ஏற்பட்ட பாதிப்புக்கு ஏற்ப வெளியேறும். சில வேளைகளில் துளிகளாகக் கண்களில் ததும்பி வெளியேறி கன்னங்களில் உருண்டு தவழ்ந்து விழும். வேறு சில சந்தர்ப்பங்களில் அப்படியே பொங்கிப் பொல பொலவென வந்து தாரையாக வடியும். இன்னும் சில ஏடாகூடமான சூழ்நிலைகளில் ஊற்றெடுத்துப் பெருகி மாலை மாலையாக வழியும். இந்த அழுகையின் அளவுகள் பாதிப்பின் தன்மையைப் பொறுத்தும், பாதிக்கப்பட்டவரின் மன நிலையைப் பொறுத்தும் மாறுபடும். மேற்கண்ட கண்ணீரின் அளவுகளில் ஏதாவது ஒரு வகையான அனுபவம் எல்லா மனிதருக்கும் ஏதாவது ஒரு கட்டத்தில் இருக்கவே இருந்திருக்கும். இல்லையில்லை இந்த அனுபவத்திற்கு நான் விதிவிலக்கு என்று ஒருவேளை யாராவது சொன்னால் அவர்களை மனித இனத்திலிருந்து விடுவித்து, எவ்விதத் தயக்கமும் இல்லாமல் வேறு ஏதாவது இனத்தில் தாராளமாகச் சேர்த்துவிடலாம். சரிதானே!

மனுக்குலத்துக்குப் பொதுவாக இருக்கக்கூடிய அழுகை, சிரிப்பு, கோபம் போன்ற உணர்ச்சிகள் ஒருவன் எப்படிப்பட்ட குணங்களை உடையவனாக இருக்கிறான் என்பதை எடுத்துச் சொல்லும் அடையாளங்களாகவும் கருதப்படுகிறது. ஆம், ஒருவன் அழுதால், அவன் எதற்காக அழுகிறான், யாருக்காக

அழுகிறான் என்பதை வைத்தும்; ஒருவன் சிரித்தால், அவன் எப்படிச் சிரிக்கிறான், யாரைப் பார்த்துச் சிரிக்கிறான், எவ்வளவு நேரம் சிரிக்கிறான் என்பதைக் கொண்டும்; ஒருவன் கோபப்பட்டால், எதற்காகக் கோபப்படுகிறான், எந்தளவு கோபப்படுகிறான், கோபத்தின் விளைவாக என்ன செய்கிறான் என்பதையெல்லாம் வைத்து **சம்பந்தப்பட்டவனுடைய உள் மனதை** ஓரளவுக் காகிலும் கணித்துவிட முடியும். நியாயந்தானே!

பொதுவாக மனிதனிடம் காணப்படும் இந்த மூன்று உணர்ச்சிகளில் சிரிப்பு தவிர மற்ற இரண்டு உணர்ச்சிகளின் அனுபவங்கள் இயேசு ஆண்டவருக்கும் இருந்துள்ளதென்பதை வேதவசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடியும். இயேசு சிரித்தார் என்று ஏனோ வேதாகமம் எங்கும் கூறுவதில்லை. ஆயினும், தன்னுடைய பூமிக்குண்டான 331/2 ஆண்டுகால வாழ்க்கையில் அவர் சிரிக்காமலே இருந்திருப்பார் என்பதை ஏற்றுக்கொள்ளச் சற்று சிரமமாகவே உள்ளது. எப்படியெனில், " சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள், அழுகிறவர்களுடனே அழுங்கள் " (ரோமர் 12:15) என்று பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தின இயேசுவானவர், சந்தோஷப்படுகிறவர்களுடன் சேர்ந்தபொழுது சந்தோஷப்படாமலா இருந்திருப்பார்? சந்தோஷப்படுகிறவர்களுடன் இயேசு எங்கே இருந்தார் என்று கேட்கிறீர்களா? கானா ஊரிலே அவர் கலந்து கொண்ட கலியாண வீடு ( யோவான் 2 : 1 – 11) சந்தோஷமான இடம் இல்லையா? அப்படியானால், இயேசு சிரித்திருக்க வாய்ப்புண்டுதானே! **நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு ஆண்டவர்**, உம்மணா மூஞ்சியாகவா இருந்திருப்பார்? (அப் 10:38) சரி போதும், இதோடு நிறுத்திக் கொள்ளலாம். ஏனெனில், **மறைவானவைகள் கர்த்தருக்கே உரியவைகள்** (உபா 29:29).

சரி, இந்த மூன்று உணர்ச்சிகளில் இயேசுவின் கண்ணீர்கள் பற்றித்தான் நாம் பார்க்க உள்ளோம். இயேசுவின் சிரிப்பிலிருந்து நம்முடைய ஆன்மீக வாழ்க்கைக்குக் கிடைக்கும் பாடங்களை விட, அழுகையிலிருந்து கிடைப்பவை கள் அதிக அர்த்தமுள்ளதாக இருக்குமென்பதால், ஆவியானவர் அழுகைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிப்படுத்தியுள்ளார். **கண்ணீர் இல்லாத இடத்தில் நித்திய காலமெல்லாம் வாழ்ந்து வந்த இயேசு, இப்பூலோக வாழ்க்கையில் கண்ணீர் விட்டார் என்றால், அதுதானே சிரிப்பைக் காட்டிலும் பெரிய செய்தி.** இது சம்பந்தமாக வேதாகமம் வெளிப்படுத்தும் விதத்தைப் பாருங்கள். " **இயேசு கண்ணீர் விட்டார்** " என்று யோவான் நற்செய்தியாளனும் (யோவான். 11 : 35) **இயேசு கண்ணீர் விட்டு அழுதார்** என்று வைத்தியனாகிய லூக்காவும் (லூக்கா 19:41) **பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் என்று** எபிரெயர் ஆசிரியரும் (எபி 5:7) எழுதிக் கொடுத்துள்ளனர். இந்த வசனங்களின் வார்த்தைகளைக் குனிந்து கவனித் தால், மனிதர்களாகிய நம்மைப் போன்றே **அவருடைய அழுகையின் அளவுகளும்**,

**அவருடைய மனபாரத்திற்கு ஏற்ப மாறிருக்கிறதென்பதை** நாம் கவனிக்க முடியும். அதுமாத்திரமல்ல எவைகளினிமித்தம் அவர் மனம் பாரப்பட்டு இப்படியாகக் கண்ணீர் விட்டிருக்கிறார் என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

... **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது** " என்று (பிலி 2:5) நாம் போதிக்கப்பட்டிருக்கிறபடியால், அச்சிந்தையை நாமும் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசுவின் கண்ணீர்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

## I. இயேசு கண்ணீர் விட்டார் ( யோவான் 11 : 35 )

கண்ணீர் இல்லாத இடத்திலிருந்து வந்த இயேசு இப்பூமியின் வாழ்க்கையில் கண்ணீர் விட்டார் என்று வெளிப்படுத்தப்பட்டிருப்பதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற பாடம் என்னவென்று முதலில் பார்ப்போம்.

எருசலேமுக்கு அருகாமையிலிருந்த அந்தக் கிராமத்தின் பெயர் பெத்தானியா. அக்கிராமத்துக் குடும்பங்களில் இயேசுவை அதிகம் நேசித்த ஒரு குடும்பம் இருந்தது. அக்குடும்பத்தில் அங்கமாக இருந்தவர்கள்தான் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு. இந்த மரியாள்தான் கர்த்தருக்குப் பரிமளத் தைலம் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் (யோவான் 11 : 2 ). லாசரு ஒரு சமயம் வியாதியில் விழுந்தான். தன்னால் சிநேகிக்கப்பட்ட லாசருவின் வியாதியை இயேசு கேள்விப்பட்டவுடன் ஓடோடிப் போகாமல், தான் தங்கியிருந்த இடத்தில் மேலும் இரண்டு நாள் தாமதம் செய்தார் ( 11 : 6 ) இயேசுவின் இந்தச் செயல், நாம் இயேசுவின் அன்பை சந்தேகிக்கும்படியாக நம்மை ஏவும். உண்மைதான். ஆயினும், இயேசு நம்முடைய எண்ணங்களின்படி செயல்படவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. ஒவ்வொரு காரியத்திற்கும் அவருக்கென்று ஒரு நோக்கமும், திட்டமும், காலமும் உண்டு. அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வியாதியாயிருந்த லாசரு நித்திரையடைந்ததற்குப் பிறகு பெத்தானியா வந்த இயேசுவை, முதலில் மார்த்தாளும், பிறகு மரியாளும் எதிர்கொண்டு போன போது, **" தன் பாதம் அமர்ந்து " ( லூக் 10:39 ) சத்திய வார்த்தைகளைக் கேட்ட மரியாள் இப்படித் " தன் பாதத்தில் விழுந்து ( யோவான் 11:32 ) அழுகிறதையும் அவர்களோடு கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது ஆவியிலே கலங்கி துயரமடைந்து... கண்ணீர் விட்டார் "**. இங்கே இயேசு எதற்காகக் கண்ணீர் விட்டார் என்பதைக் கவனிக்க வேண்டும். லாசரு மரித்துப்போனதற்காக இயேசு கண்ணீர் விடவில்லை. மரித்ததற்காகக் கண்ணீர் விடுவதாக இருந்தால் மரித்துப்போன செய்தி வந்தவுடனே தன் சீடர்களோடு சேர்ந்து கண்ணீர் விட்டிருக்க வேண்டும். ஆனால், இயேசு அப்படிக் கண்ணீர் விடவில்லை. ஏனெனில், லாசருவின் வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை

விளங்குவதற்கு ஏதுவாயிருந்ததென்பது (யோவா 11:4) அவருக்குத் தெரியும்.

அப்படியானால், எதற்காகக் கண்ணீர் விட்டார்? மரியாளும், அவளோட கூட வந்த யூதர்களும் அழுததைக் கண்டுதான் இயேசு கண்ணீர் விட்டார். ஆம், **பிறர் படும் பாடுகள் எப்பொழுதும் அவரைப் பாடாய்ப் படுத்தியிருக்கிறது.** குஷ்டரோகியாயிருக்கிறவனைக் கண்டு **மனதுருகியிருக்கின்றார்** ( மாய் 1 : 41) பசியாயிருந்தவர்களைப் பார்த்தபோது **பரிதபித்திருக்கிறார்** ( மாற் 8:2 ). இந்த இயேசுதான் பிறர் அழுகிறதைப் பார்த்த போது தானும் கண்ணீர் விட்டார். அங்கே இயேசு கண்ணீர் விட்டார் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை dakruo என்பது. இவ்வார்த்தைக்கான சொல் அர்த்தம் " கண்ணீர் சிந்தினார் " என்பது. இப்படிக் கண்ணீர் விடுவது அல்லது சிந்துவது அழுகையின் அளவுகளில் **முதல் அளவு.**

அருமையானவர்களே, அழுகையின் இந்த முதல் அளவிலான அழுகை இயேசுவுக்கு ஏன் வந்தது என்பதை நாம் எந்தளவு புரிந்து கொண்டுள்ளோம்? பிறர் படும் பாடுகள் மற்றும் துயரங்களில் நம்முடைய பங்களிப்பு எந்தளவில் உள்ளது? பெரும்பாலும், அவர்களது துக்கத்தில் நானும் " கலந்து கொண்டேன் " என்று கணக்குக் காட்டும் அளவில்தான் உள்ளதே தவிர, என்னுடைய பங்கேற்பும், பங்களிப்பும் அதில் இருந்தது என்று சொல்லும்படியான அளவில் இருப்பதில்லை. கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுலடியார் கூறுவதையும் பாருங்கள் " **ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயங்களும் கூடப் பாடுபடும்** ... " ( I கொரி. 12:26 ) என்று. அதாவது, ஒரு இடத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் குடும்பங்களில் ஒன்று பாடு பட்டால், மற்ற குடும்பங்களின் பங்கேற்பும், பங்களிப்பும் முழுமையாக இருக்க வேண்டுமென்பதற்காக, சரீர அவயத்தை உதாரணமாகக் கொடுத்துள்ளார். சரீரத்திலுள்ள ஓர் அவயவம் வேதனைப்பட்டால் சரீரம் முழுவதும் பாடுபடுகிறது. தானே. **ஆனால், இந்த நிலை ஆவிக்குரிய குடும்பங்களுக்கிடையே காணப்படுகிறதா?**

கண்ணீரின் அனுபவம் கடுகளவும் இல்லாத இடத்திலிருந்து வந்த இயேசுவானவரே பிறருடைய பாடுகளில் கண்ணீர் விட்டிருக்கும் போது. நாம் நம் இருதயத்தை இளக்க மனமில்லாமல் இருப்பது எவ்வித்திலும் நியாயமாகாது. மாத்திரமல்ல, நித்திய வாழ்க்கையை அவரோடு கழிக்க உதவி செய்யாது. ஆகவே, இக்காரியத்தில் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாக நாம் ஒவ்வொருவரும் வாழ எல்லாவித முயற்சிகளையும் எடுப்போம்.

II. **இயேசு கண்ணீர் விட்டு அழுதார் ( லூக்கா 19:41 )**

கண்ணீர் இல்லாத இடத்திலிருந்து வந்த இயேசு இப்பூமியின் வாழ்க் கையில் " கண்ணீர் விட்டு அழுதார் " என்று வெளிப்படுத்தப்பட்டிருப்ப திலிருந்து

நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம் என்னவென்று பார்போம்.

இப்பாடத்திற்கான பின்னணிக்கும் நாம் எருசலேமுக்குத் தான் போக வேண்டியுள்ளது. அதினாலென்ன பயமில்லாமல் புறப்படுங்கள். ஓசியில் தானே போகிறோம்! அந்த நாட்கள் இயேசு ஆண்டவரின் பூமிக்குண்டான ஊழியம் நிறைவை நெருங்கிக் கொண்டிருந்த காலகட்டம். அவருடைய கடைசிப் போதகங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்த நேரமது. ஒரு சமயம் எருசலேமுக்குப் போகப் புறப்பட்டு முன் நடந்து போனார் ( லூக். 19:28 ). அப்பொழுது, அதிக எதிர்ப்பில்லாமல் அவிழ்த்து வரப்பட்ட கழுதைக் குட்டியின்மேல் தங்கள் ஆடைகளைப் போட்டு அலங்கரித்து, இயேசுவை அதின்மேல் ஏற்றி பவனிக்கு ஆயத்தமானார்கள். அப்படிப் பவனியாக அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, தங்கள் ஆடைகளை வழியிலே விரித்து இயேசு ஆண்டவருக்கு மரியாதை செலுத்தினார்கள். பவனி நகர்ந்து செல்லச் செல்ல திரளான கூட்டம் சேர்ந்து, **கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்** ( லூக். 19:28-38).

இது போதாதா, அவருக்கு எதிராக வரிந்து கட்டி நின்றவர்களுக்கு! ஒரு தச்சனுடைய மகனாகிய இயேசுவை, " **கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா** " என முழக்கமிடுவதை போலிப் பக்தி வாழ்க்கை வாழ்ந்து வந்த பரிசேயர்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா? இதுவரைக்கும் **தங்களை இயேசுவின் ஏனைய சீடர்களைப் போலவே காட்டிக்கொண்டு**, எரிகோவிலிருந்து தீய நோக்கத்தோடு கூடவே வந்த இவர்களால் இதற்குமேல் பொறுக்க முடியவில்லை. " **உம்முடைய சீடரை அதட்டும்** " என்று கேட்டுக் கொண்டார்கள் (வச.39). அதட்டப்படவேண்டிய அளவுக்கு அவர்கள் எந்தத் தவறும் செய்ய வில்லை. அங்கிருந்து விரட்டப்பட வேண்டிய பரிசேயர்கள், நியாயமானதை நடப்பித்த சீடரை அதட்டும்படி கேட்கிறார்கள். இதெப்படி இருக்கு? பல வேளைகளில், கிறிஸ்தவ உலகில் மெய் யான இரட்சிப்பின் திட்டம் பற்றியும், மெய்யான ஆராதனை பற்றியும் எழுப்பப் படும் **சத்தியத்தின் குரல்கள் அடங்கிப் போகும்படி, அதட்டப்படுவதையும், நிராகரிக் கப்படுவதையும் நிதர்சனமாகப் பார்க்க முடிகிறது**. ஆனால், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அப்பொழுதே அப்படித்தானே நடந்துள்ளது!

அங்கே, அனல் தெறிக்கும் அவர்கள் ஆத்திரத்திற்கு இயேசு மிகக் கூலாகப் பதிலளித்தார் " ... **இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகள் கூப்பிடும்** " என்று. அதாவது, அவர்கள் சொல்லுவதெல்லாம் உண்மை. நீங்கள் நினைப் பது போல் அவர்கள் வாயை அடக்கிவிட முடியாது. அப்படியே அடக்கினாலும் அது வேறு வகையாக வெளிப்படும் என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது

போல் ஏற்றிவிட்டுத்தான். எருசலேம் நகரத்தைப் பார்த்து, "**கண்ணீர் விட்டழுது**" **உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்; இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது** என்றார் ( லூக். 19:40-42 ). இங்கே இயேசுவின் வார்த்தைகளை உற்று நோக்கின், எருசலேம் வாசிகளுக்குச் சாதகமான ஒரு சொற்றொடர் "பதுங்கியிருப்பதைப்" பார்க்க முடியும். ஆம், "**இந்த நாளிலாகிலும்**" என்கிறார். அதாவது, இதுவரைக்கும் எப்படியிருந்தாலும், இப்பொழுது "விண் அதிர" முழக்கம் எழும்புகிறதே அதைக் கவனித்தாவது உண்மையை ஏற்றுக்கொண்டாயானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்கிறார்.

அருமையானவர்களே, இயேசுவானவர் அங்கே மனந்திரும்பாத மக்களுக்குக் **காத்துக் கொண்டிருக்கும் அழிவை எண்ணி** கண்ணீர்விட்டு அழுதார் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை - Klaio என்பது இதன்பொருள் **வாய்விட்டு அழுவது**. வாயைத் திறக்காமல் வரக்கூடிய அழுகை அல்ல. அழுகையின் அளவுகளில் **இது இரண்டாவது வகை**. சரீரப் பாடுகளோடு இருந்தவர்களிடம் காட்டின மன பாரத்தை விட **அதிகமான பாரம் மனந்திரும்பாதவர்களினிமித்தம் இயேசுவுக்கு இருந்துள்ளது**. இயேசுவின் இந்த நிலைப் பாட்டின் மூலம் **அழிந்துபோகும் சரீர வாழ்க்கை முக்கியமா அல்லது என்றென்றும் அழியாத ஆன்ம வாழ்க்கை** முக்கியமா என்பதை ஐயத்திற்கிடமின்றி அறிந்து கொள்ளலாம்.

ஒருவேளை, நித்தியமான ஆன்ம வாழ்க்கைதான் முக்கியம் என்று சொல்வோமானால், இயேசு எதிர்பார்க்கும் மனமாற்றம், அதாவது, உண்மையை ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் செயல்படுவது, தவறைத் திருத்திக் கொள்வது, நீதிக்குத் தலைவணங்கி கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பது போன்றவை மிகவும் முக்கியம். நம் ஒவ்வொருவரையும் பாவத்திலிருந்து மனந்திரும்பச் செய்வதற்கு, **கண்ணீரில்லாத இடத்திலிருந்து வந்த இயேசுவானவர் ( வெளி 2:14 ) எப்படி அழுதுள்ளார் பாருங்கள்**. இந்தக் கண்ணீராவது கல்லான இருதயங்களில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாதா?

அன்பானவர்களே, நாம் எப்படி வாழ்ந்து கொண்டுள்ளோம்? மனந்திரும்பின வாழ்க்கையின் அவசியத்தை உணர்ந்திருக்கிறோமா? தேவபக்தியான வாழ்க்கைக்கு மனந்திரும்புதல் அவசியமானபடியால் தான் இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானனும், இயேசுவும், "**மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபம்**" என்று பிரசங்கித்தனர் (மத். 3:1; 4:17). இன்னும், அப்போஸ்தலன் பவுல் அத்தேனே பட்டணத்து மக்களிடம் பேசினபோது, "**அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்;**

**இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்** " என்றான் ( அப் 17:30 ). ஒருவேளை, நாம் இதுகாறும் மனந்திரும்பி, இரட்சிக்கப்படாதவர்களாக இருப்போமானால், இயேசுவின் கண்ணீரைத் துடைக்கும் விதமாக இப்பொழுதே மனம்மாறுவோம்.

## III. **இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார் ( எபி.5:7 )**

கண்ணீர் இல்லாத இடத்திலிருந்து வந்த இயேசு இப்பூமியின் வாழ்க்கையில் " பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார் " என்று சொல்லப்பட்டதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம் என்னவென்று அடுத்து பார்ப்போம்.

ஆஹா, மீண்டும் எருசலேம். ஆனால், இந்தமுறை எருசலேமுக்கு வெளியே. ஆம், பட்டணத்துக்குக் கிழக்கே, கீதரோன் பள்ளத்தாக்குக்கு அப்புறத்தில் உள்ள ஒலிவ மலைக்கு அருகே. அங்கே இருந்ததுதான் கெத்சமனே தோட்டம். எபிரெயர் ஆசிரியர் ஆவியானவரின் துணைகொண்டு இந்த நிருபத்தை வடித்த போது, " அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத் தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்தார் " ( எபி.5:7) என்று எழுதினபோது அவருடைய மனதில் கெத்சமனே தோட்டத்தின் காட்சிகள் தான் கண்முன்னே நின்றிருக்கும். எப்படியெனில் மத்.26:36,37 மற்றும் லூக்கா 22:44 வசனங்கள் இதை உறுதிசெய்கின்றன.

கெத்சமனே தோட்டத்தில் இயேசுவின் மன்றாட்டு என்ன சாதாரண அளவிலா இருந்தது? வைத்தியனாகிய லூக்கா, " **அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது** " என்று எழுதியுள்ளார். (லூக்கா 22:44 ). இவ்வசனத்தில் கண்ணீர்விட்டார், அழுதார் என்ற வார்த்தைகள் நேரடியாக இல்லை. ஆனால், இதே சம்பவத்தை மேற்கோள் காட்டும் எபிரெயர் ஆசிரியர் " **மகா சத்தமிட்டுக் கண்ணீர்விட்டார்** " என்று கூறியுள்ளார். இக்கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில்தான், இதற்கான கிரேக்க மொழி வார்த்தையும் அமைந்துள்ளது - Ischuros Krauge - என்று. இதன் பொருள் **கத்தி கதறி அழுவது. இது அழுகையின் மூன்று அளவுகளில் மூன்றாவது வகையைச் சார்ந்தது.**

இந்த அழுகையின் அளவை, ஓரளவுக்காகிலும் புரிந்துகொள்வதற்கு பழைய ஏற்பாட்டு சம்பவம் ஒன்றை உங்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருகிறேன். ஆம், ஒரு சமயம் தாவீதும் அவன் மனிதரும் சிக்லாகுக்குத் திரும்பி வருகிறதற்குள்ளே அமலேக்கியர் சிக்லாகின் மேல் விழுந்து, பட்டணத்தைச்

சுட்டெரித்து, தாவீதினுடையவர்களின் மனைவிகளையும், குமாரத்திகளையும் சிறைபிடித்துப் போய்விட்டார்கள். அப்பொழுது தாவீதும், அவனோடிருந்த ஜனங்களும் **" அழுகிறதற்குப் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள் "** ( I சாமு 30:4 ). ஆயினும், கெத்சமனேயில் இயேசுவின் அழுகைக்கு இந்த அழுகை ஈடாகாது. எப்படியெனில், லூக்கா 22:44 ல் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளின் உண்மைத் தன்மையை, உள்ளப்பூர்வமாக ஏற்றுக்கொள் வதற்கு, மருத்துவ விஞ்ஞான உலகம் மூக்கின் மேல் விரலை வைத்து வெகுகாலம் காத்திருந்தது. ஆம், அதாவது " **வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் வெளிவந்தது** " என்பதை ஏற்றுக்கொள்வதற்கு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவர் வில்லியம் ஸ்ட்ராடு 1874-ம் ஆண்டில் அது சாத்தியம் என்று நிரூபித்து, அமெரிக்க நாட்டைச சேர்ந்த வில்லியம் எட்வர்ட் என்னும் நோய் கண்டறியும் நிபுணர் 1986-ம் ஆண்டில் உறுதி செய்யும் வரை காத்திருந்தது. எப்போதும் போல் இறுதியில் வேதாகமமே வென்றது.

இங்கே கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி, இயேசு **ஏன் இந்தளவு வியாகுலப்பட்டு பலத்த சத்தத்தோடு கண்ணீர்விட்டு அழுதார்?** என்பது தான். கண்டிப்பாக, சிலுவையில் படப்போகிற பாடுகளைக் குறித்தும், தன்னுடைய மரணத்தைக் குறித்துப் பயந்தும் அழுதிருக்க வாய்ப்பில்லை. எப்படியெனில், பிசாசினாலே அவர் சோதிக்கப்பட்ட போதும் ( மத். 4 ம் ஆதி ). பேராசை பிடித்தவர்களை தேவாலயத்தைவிட்டு விரட்டினபோதும் ( யோவான் 2 : 15 ). இன்னும் வேறு சில கட்டங்களிலும் அவர் தைரியமாகவே செயல்பட்டுள்ளார். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று ( யோவா. 14 : 1 ). சீடர்களைப் பார்த்துச் சொன்னவர் தனக்கொரு பிரச்சினை வந்தபோது கலங்கியிருப்பாரா?** சொல்லுங்கள். நிச்சயமாக அப்படியிருக்கிறது.

அப்படியானால், இந்தளவு அழுகைக்கான காரணம்தான் என்ன? வேறொன்றுமில்லை, **" பாவம் " தான் காரணம்.** மானிடம் பாவத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருப்பது பற்றிய தன் மனபாரம் முதல் காரணம். அடுத்து, **எல்லோருடைய பாவமும் தன்மீது சுமத்தப்பட்டுத் தான் பாவமாக்கப்படப் போகிறோமே** என்ற மனபாரம். மேலும், அப்படிப் பாவமாக்கப் படும்போது, **நித்திய காலமெல்லாம் தன் பரலோகத் தகப்பனோடு தனக்கிருந்த உறவு தற்காலிகமாகத் துண்டிக்கப்படுமே என்ற மனத் துயரம். இந்தத் துயரத்தின் வெளிப்பாடுதான், " என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் "** (லூக்.27:46) என்ற கூப்பாடு. **அப்படியானால் பாவம், நம் ஆண்டவரை எப்படிப் பாடாய்ப்படுத்தியிருக்கிறது** என்று எண்ணிப் பாருங்கள்!

அருமையானவர்களே! பாவத்தைக் குறித்த நம்முடைய மனோபாவம் எப்படியுள்ளது? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் (பிலி. 2:5). அது, " தேவனின்

தப்பு " என்று சொல்லிதொடர்ந்து பாவத்தில் இருக்கப் போகிறோமா அல்லது தேவ எதிர்பார்ப்பை நிறைவேற்றப் போகிறோமா? சொல்லுங்கள். " நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம் " (I யோவா. 3:4) என்று யோவான் அப்போஸ் தலன் கூறுகிறார். சிலுவைக்குப்பின்னால் வாழும் நம்மைக் கட்டுப்படுத்துகிற பிரமாணமாக கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு இருக்கிறது. அதுதான் நம்மைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் ( யோவா.12:48 ) ஆகவே, பூரணப்பிரமாண மாகிய கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேச சட்டங்களுக்கு நம்மைச் சமூகமாக ஒப்புக்கொடுத்து தேவனுடைய பார்வையில் பாவ மன்னிப்பைப் பெற்றவர்களாகவும், பாவமில்லாத பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கைக்கு நம்மை ஒப்புக் கொடுத்தவர் களாகவும் காணப்படுவோமாக! ஆமென். ●

---


ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!!

CHRUCH OF CHRIST · PROCLAIM THE GOSPEL · KANGAYAM - 638 701. INDIA

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
இணைந்து நடத்தும்

# பதினெட்டாம் வேதாகம கருத்தரங்கம்

**கருப்பொருள் : " நானே... "**

**THEME : " I AM... "**

**நாள் : அக்டோபர் 21, 22 – 2015 ( புதன், வியாழன் )**

(அரசு விடுமுறை நாட்கள்)

**Date : October 21, 22 - 2015 ( Wednesday, Thursday )**

**நேரம்**

புதன் : காலை 8:45 – மாலை 4:45 மணி
வியாழன் : காலை 8:45 – மதியம் 1:00 மணி

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

# ஏன் நாங்கள் புதிய பிறப்பு பற்றி பிரசங்கிக்கிறோம்?

## J.C. சோட்

**பு**திய பிறப்பு என்றால் என்ன? இது ஒரு நல்ல கேள்வி. உண்மையில் இந்தக் கேள்வி அநேக முறை கேட்கப்பட்டு இதற்குப் பல்வேறு பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், அநேக ஜனங்கள் இது என்ன என்பதை அறியாமல் இருந்து வருகிறார்கள்.

யோவான் மூன்றாம் அதிகாரத்திற்கு நாம் திரும்பும் போது அங்கே கிறிஸ்து புதிய பிறப்பு அல்லது ஒருவர் மறுபடியும் பிறத்தல் பற்றி பேசுகிறதை நாம் பார்க்கி றோம். இது கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பு போதிக்கப்பட்டது. அப்போது, பழைய பிரமாணம் ஒரு சட்டமாக இருந்து கட்டுப்படுத்தியது என்பதை மனதில் வையுங்கள். ஆயினும், கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கிறிஸ்தவம் வரும் போது என்ன அவசியப்படும் என்கிற எதிர்பார்ப்புடன் இது போதிக்கப்பட்டி ருந்தது. இது ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு போதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, ஒருவர் அதில் பிரவேசிக்க வேண்டுமென்றால் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார்.

யோவான் 3 : 1 – 13 வசனங்களின் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இராத்திரியில் இயேசுவி னிடத்தில் வந்தான். அவன் ஒரு பரிசேயனாகவும், யூதர்களுக்கு அதிகாரியா கவும் இருந்தபடியால் தன் வருகை இரகசியமாக இருக்க வேண்டும் என்பதற் காக இராத்திரியில் வந்தான் என சிலர் நினைக்கின்றனர். இந்த பரிசேயர்கள், யூதர்களில் மிகவும் பக்தியுள்ள ஒரு பிரிவினர். அவர்கள் உயிர்த்தெழுதலையும், தேவ தூதர்களையும் விசுவாசித்தனர். இந்த நிக்கொதேமு யூதர்களுக்கு அதிகாரியாக இருந்தபடியால் இவர் வயதில் மூத்தவராகவும், பதவியும், மரியா தையும் பெற்ற ஒருவராகவும் வாழ்ந்திருக்கிறார் என பொருள்படுகிறது. எப்படி யோ, இவன் இயேசுவினிடத்தில் வரும் போது தன்னை இயேசுவின் விசுவாசி என அடையாளப்படுத்துகிறான். இயேசுவை ரபீ அல்லது போதகர் என்று அழைப்பதன் மூலம், கிறிஸ்து அற்புத அடையாளங்களைச் செய்ய வல்ல வராயிருந்தபடியால், அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இந்த மனிதன் ஒத்துக் கொண்டான். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலையில் ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண வேண்டுமென்றால் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசு விளக்கத் தொடங்கினார். ஆனால், இயேசு என்ன

பேசினார் என்பதை புரிந்து கொள்ள முடியாததால் அவன் குழப்பமடைந்தான். அதன் பின்பு, ஒருவன் முதிர்வயதான பிறகு எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என அறிய விரும்பினான். நிக்கொதெமு தொடர்ந்து கேட்கும் போது, ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அப்படி ஒருவனாலும் செய்ய முடியாது; இயேசுவும் அப்படிப் போதிக்கவில்லை. கிறிஸ்து ஆவிக்குரிய பிறப்புபற்றி பேசிக் கொண்டிருக் கிறார். ஆனால், நிக்கொதேமு சரீரப் பிரகாரமான பிறப்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ஏனென்றால், அவனுக்குத் தெரிந்த ஒரே பிறப்பு இதுதான்.

இங்கே நாம் இந்த வார்த்தைகளை மேலுமாக ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது, ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று இயேசு சொன்னதைக் கவனியுங்கள். பிறப்பு என்பது ஒரு புதிய வாழ்க்கை சம்பந்தப்பட்டது. ஆனால், இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஜலத்தைப் பற்றி என்ன? இதற்கும் சரீரப்பிர காரமான பிறப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஏனென்றால், இயேசு நிக்கொதேமுவிடம் இந்த பிறப்பு, மறுபடியும் பிறப்பதற்கு ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசிப்பதிலிருந்து வேறுபட்டது என்று விளக்கிவிட்டார். " தண்ணீர் " என்கிற வார்த்தையை நாம் சிந்திக்கும் போது இந்த வார்த்தை எங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் அது ஆவிக்குரிய தண்ணீராக பயன்படுத்தப்பட்டால் அது ஜீவத் தண்ணீராகத்தான் இருக்க முடியும்.

மாறாக, ஜலம் என்று வித்தியாசமான வசனங்களில் வெறுமனே காணப் பட்டால் அது நாம் பயன்படுத்தும் சொல் அர்த்த ரீதியிலான தண்ணீராகத்தான் பொருள்படும். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் அது எவ்விதமாக பயன்படுத்தப் பட்டிருக்கிறது? இங்கே ஜலம் என்று மட்டும் இருப்பதால், இயேசு சாதாரண தண்ணீரைப் பற்றிதான் பேசுகிறார் என்கிற முடிவுக்கு வரவேண்டும். இப்போது, அடுத்த கேள்வி; தண்ணீரோடு இணைக்கப்பட்டிருக்கிற எந்தக் கட்டளையை நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கிறோம்? கர்த்தருடைய வார்த்தைகளில் உங்களுக்குப் பரிச்சயம் இருந்தால், தண்ணீரை சம்பந்தப்படுத்துகிற அந்தக் கட்டளை அல்லது செயல் ஞானஸ்நானம் தான் என்பது விளங்கும். அப்போஸ் தலர் 8:26-39 வசனங்களில், அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவான வர் போதிக்கப்பட்டு, பின்பு ஞானஸ்நானம் பெறும்படி தண்ணீருக்குள் அழைத் துச் செல்லப்பட்டான். மேலுமாக, ஒருவன் ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். ஒருவன் ஜலத்தி னால் எப்படிப் பிறக்க முடியும்? இங்கே தண்ணீரானது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறதாக இருந்தால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோசெயர் 2:12), தண்ணீரில் அடக்கம்

பண்ணப்பட்டால், ஒருவர் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது, அங்கே ஒரு மறுபிறப்பின் அனுபவம் ஏற்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ் நானத்தில் இது தான் சம்பவிக்கிறது என்று விளக்குகிறார் (ரோமர் 6:3,4).

ஜலத்தினால் பிறப்பது அல்லது ஞானஸ்நானம் பெறுவது என்பதை நாம் தொடர்ந்து சிந்திக்கும் போது, ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது புதிய ஜீவனுக்கான அனுபவம் ஏற்படுகிறதென்று நாம் நினைப்பூட்டப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:3-லும், கலாத்தியம் 3:26, 27 வசனங்களிலும் சொல்லும் போது, ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது என்கிறார். மேலும், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் புது சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் பவுல், " இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின " (I கொரிந்தியர் 5:17) என்கிறார். பேதுரு கிறிஸ்தவர்களிடம் பேசும் போது, " நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் " (I பேதுரு 2:3) என்கிறார்.

இரண்டாவது, ஒருவர் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். இங்கே ஆவி என்பது யாரைக் குறிக்கிறது? எபேசியர் 4:4-ல் பவுல் ஒரே ஆவி நமக்கு உண்டு என்று சொல்லியிருக்கிறார். அது என்ன ஆவியாயிருக்கும்? இது பரிசுத்த ஆவிதான் (யோவான் 14:26; அப் 1:8; 2:38; (I தெச 4:8). ஆனால், பரிசுத்த ஆவியானவரின் பணி என்னவாயிருந்தது? அவர் அப்போஸ்தலர்களையும், மற்றவர் களையும் கர்த்தருடைய வார்த்தை யை எழுதும்படி வழிநடத்தினார். அதற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டு தேவ னுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய வார்த்தையை எழுத அவர்களை வழிநடத்தினார் ( II பேதுரு 1:21). " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது " என்று பவுல் எழுதி னார். (II தீமோத்தேயு 3:16,17). ஆனால், ஆவியின் வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது? சத்தியம் (யோவான் 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16) அல்லது ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பது (அப். 2:37,38). ஒருவர் ஆவியின் வார்த்தையை விசுவாசித்தால் அதற்கு அவர் கீழ்ப்படியமாட்டாரா? பேதுரு அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். " ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாக அன்பு கூருங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய

அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெபிக்கப்பட்டிக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின்பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" ( I பேதுரு 1:22-25).

எனவே, ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதென்பது, ஒருவர் தேவனுடைய வார்த்தையின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறும் போது, கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையிலே சேர்த்துக் கொள்வார் என்பதே. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தை வாசியுங்கள். அங்கே இதைத் தான் எருசலேமில் இருந்த ஜனங்கள் செய்ததை நீங்கள் காண முடியும். அங்கே ஜனங்கள் மறுபடியும் பிறந்தார்கள் என்கின்ற அதே துல்லியமான வார்த்தைகள் இல்லாவிட்டாலும், ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கும் போது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்று கிறிஸ்து சொன்னபடியாக அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டபோது, அதை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திருந்தி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற போது கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டார். ஆனால், ராஜ்ஜியமும், சபையும் எப்படி? இரண்டும் வெவ்வேறு அமைப்புகளா? வேத வாக்கியங்களில் ராஜ்யம், சபை இவ்விரண்டும் ஒரே அமைப்பாக அடையாளப்படுத்துகிறபடியால் அவைகள் வெவ்வேறு அமைப்புகள் அல்ல.

எனவே, ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதென்பது ஒருவர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் பேரிலுள்ள தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்படும் படி தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் தம்முடைய சபையில் அவரைச் சேர்த்துக் கொள்கிறார் அதாவது அந்த நபர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார் என்பதே. கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, ஒரு புது சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக அவன் வளர்ந்து, விருத்தியடைந்து முழுமையான வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவனாகும்படி விசுவாசத்தில் உறுதியாக வேண்டும். இதை நாம் செய்து, பிறகு ஒவ்வொரு வருக்கும் பிரசங்கிக்க வேண்டும். முழு உலகத்திற்கும் பிரசங்கிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த முடியும். அப்போது தான் நமக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டாகும்.

●

பெண்கள் பகுதி

# நம் குடும்பத்தில் இயேசு

**சகோ. ரேச்சல் இராஜநாயகம்**

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது சில குடும்பங்களுக்கு விருந்தாளியாகச் சென்றார்.

1. சீமோன் பேதுரு, அந்திரேயா வீடு (மாற்கு. 1:29-31)
2. யவீருவின் வீடு (மாற்கு. 5:22-41)
3. பெத்தானியாவின் மார்த்தாள், மரியாள் வீடு (லூக்கா. 10:38-43)
4. சகேயுவின் வீடு (லூக்கா. 19:1-10).

மேற்கண்ட நான் குடும்பங்களும் மாற்குவில் இருந்து இரண்டும், லூக்காவிலிருந்து இரண்டுமாக பல நல்ல கருத்துக்களால் பின்னிப் பிணைந்து உள்ளது. இந்த நான்கு குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் பாலஸ்தீனாவின் வடக்கில் உள்ள கலிலே யாவிலும், மற்ற இரண்டும், தெற்கு முனையில் உள்ள யூதேயாவிலும் அமைந்திருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் இவர் வரவழைக்கப்பட்டார். கலிலேயாவின் வடமேற்கு எல்லையில் கரையோரத்தில் அமைந்திருந்த தங்கள் ஏழ்மையான வீட்டிற்கு, தங்கள் அன்பான எஜமானின் வருகையை எண்ணி சீமோன் பேருதுவும், அந்திரேயாவும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்தனர். மரிக்கும் தருவாயில் இருக்கும் தன் மகளை குணமாக்கும் படி யவீரு இயேசுவை வருந்திக் கேட்டுக்கொண்டான். பெத்தானியாவில் உள்ள மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசுவுக்கு எப்போதுமே மனமார்ந்த வரவேற்பு கிடைத்தது. ஆயக்காரருக்குத் தலைவனாயிருந்தவன் வீட்டிற்குத் தானாக சென்று தங்க வேண்டும் என்று இயேசு எண்ணினார்.

இயேசு கிறிஸ்துவுக்கு சகேயுவிடமிருந்து பெரிதாக ஒன்றும் உயர்ந்த வரவேற்பு கிடைத்தது என்று நாம் கூறிவிட முடியாது. இயேசு தாமாக இந்த வீடுகளுக்கு அழையா விருந்தாளியாகச் செல்லவில்லை. அழைத்தவர்களும் உள்ளே வெறுப்பை வைத்துக் கொண்டு வெளியே உபசரிப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்துடன் அவரை உபசரிக்கவில்லை. தங்களுடைய ஏழ்மையான வீடுகளில், தேவகுமாரனைத் தெய்வீக விருந்தாளியாக ஏற்றுக்கொண்ட விஷயத்தில், எண்ணத்திலும், செயலி லும் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினார்கள். தம்மை விரும்பாத, வரவேற்காத வீடுகளுக்குச் சென்று இயேசு கிறிஸ்து நீண்ட நேரம் தங்கினதே இல்லை. லூக்கா 4ம் அதிகாரத்தின்படி அவர் நாசரேத்திலிருந்து வெளியேறினது. மாற்கு 5ம் அதிகாரத்தில் உலக ஆசைபிடித்த கதரேனரிடமிருந்து வெளியே வந்தது ஆகிய இரண்டும் இதற்கு

தக்க சான்றுகள் ஆகும். வெளிப்படுத்தல் 3 : 14 – 22 ஆகிய வசனப்பகுதிகளில் பார்த்தால், இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த சபையிலே உள்ளவர் கூட குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் அவர்களை வாந்தி பண்ணிப்போடுவேன் என்கிறார். முடிவாக, இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இயேசுவை நாம் அழைத்தாலேயொழிய அவர் வந்து நம் வீட்டில் வாசம் பண்ணமாட்டார்.

மேலே கண்ட வீடுகளில் உண்மையாகவே தேவைகள் இருந்தது. பேதுரு, அந்திரேயா வீட்டில் பயங்கரமான சுகவீனம் இருந்தது. மாற்கு ஆசிரியர் சொல்லும் போது, பேதுருவின் மாமி ஜுரமாயிருந்தாள் (மாற்கு. 1:30) என்கிறார். லூக்கா ஆசிரியர் ஒரு வைத்தியனாக இருந்து கொண்டு அதை " கடும் ஜுரம் " (லூக்கா 4:38) என்கிறார். அதே வசனத்தில் " அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள் " என்று வாசிக்கிறோம். இந்த மாதிரி கரிசனை அவர்களுக்கிடையே இருந்த அன்பு, பாசப்பிணைப்பு, இரக்கம், ஈவு இவைகளை வெளிப்படுத்துகிறது. இதைத்தான் இன்று நாமும் எதிர்பார்க்கிறோம். இயேசுவை தங்கள் வீட்டிற்கு அழைக்கும் குடும்பங்கள் பொதுவாகவே பல தகுதியான குணங்களைப் பெற்றிருக்கும். இரண்டாவது வீடான யவீருவின் வீட்டில், சுகவீனம் மரணத்தை ஏற்படுத்தியது. உண்மையாகவே யவீருவின் வீட்டில் ஒரு தேவை இருந்தது. அதைப் போலவே, ஜீவனுள்ள வார்த்தைகள் பேசப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் பெத்தானியாவின் குடும்பத்தில் இருந்தது. தேவ சித்தத்தை நிறைவேறினதேயல்லாமல் வேறு வேலையை அவர் செய்யவில்லை. மத். 7:37-ல் " எல்லாவற்றையும் நன்றாச் செய்தார் " என்று அவர் புகழப்படுகிறார். எல்லாத் தேவைகளைக் காட்டிலும் சகேயுவின் வீட்டில் இரட்சிப்பின் தேவை இருந்தது. அநியாயமாக வாங்கினதைத் திரும்பச் செலுத்தினான். இங்கே நான்கு வீடுகள், ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தேவையில் இருந்தது.

இயேசு கிறிஸ்து ஆசீர்வாதத்தை சுமந்து கொண்டு நம்முடைய வீடுகளுக்கு வர இருக்கிறார். தெய்வீக விருந்தாளியான அவர் வெறுங்கையோடு வருவதில்லை. இந்த உலகமே கொள்ளாத அளவு ஐசுவரிய களஞ்சியம் அவருக்கே சொந்தமானது. ஒவ்வொரு வீட்டிற்கும் அவர் ஓர் ஆசீர்வாதமாக மட்டும் வரவில்லை. யார் யாருக்கு எந்த ஆசீர்வாதம் மிகத் தேவையோ அதைக் கொண்டு வருகிறார். சீமோன் வீட்டிற்கு அவர் மா மருத்துவராக, வந்தார். அவருடைய வருகையால் அக்குடும்பத்தில் அதிகம் நேசிக்கப்பட்ட அம்மாளுடைய சுகவீனம் நீங்கினதோடல்லாமல், மற்றவர்களும் ஆறுதல் அடைந்தார்கள். யவீருவின் வீட்டிற்கு உயிர்த்தெழுதலையும், ஜீவனையும் கொடுக்கிறவராக வந்தார். தன் ஒரே மகள் மரித்துப் போனபோது, இயேசுவானவர் அவளோடிருந்தது எவ்வளவு பாக்கியமான நிலையென்று பாருங்கள். நீங்களும், நானும்

பல முறை இம்மாதிரி சம்பவங்களில் என்ன செய்வது, சொல்வது என்று அறியாமல் இருக்கிறோம். ஆனால் மனிதனை சிருஷ்டித்த அவர் நம்முடைய தேவைகளைச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார். இரண்டு வார்த்தைகளை அவர் உதிர்க்கிறார். பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு (மாற்கு. 5:36). மனிதர்கள், கதை கதையாக வார்த்தைகளால் பேசலாம். ஆனால், இயேசு கிறிஸ்து இரண்டே வார்த்தைகளில் ஆறுதல் படுத்துகிறார்.

மரியாளின் வீட்டில் இருந்து தம்முடைய அற்புதமான ஜீவனுள்ள வசனங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். அதனு டைய மதிப்பு அவளுக்குத் தெரிந்திருந்தது. ஞானி சாலமோன் கூறும்போது, " ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித் தட்டில் வைத்த பொற்பழங்களுக்குச் சமானம்" ( நீதி. 25:1 ) என்கிறார். ஏவராவது ஒருவர் ஏற்ற வார்த்தைகளைப் பேசியிருப்பாரானால், அது தேவனுடைய குமாரனாகத்தான் இருக்க முடியும். ஏக்கத்தோடு இருந்த மரியாளின் இருதயத்திற்கேற்ற வார்த்தைகளை இயேசு மொழிந்தருளினார். முதலாம் நூற்றாண்டிலே எப்படி சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுத்த இரட்சகராயிருந்தாரோ, அதே இரட்சகர் தான் இன்றும் நம் வீட்டிற்கு இரட்சிப்பைக் கொடுக்க முடியும்.

இயேசு இந்த நான்கு வீட்டை விட்டுப் போகும்போது, அவர்கள் முன்னிலையைக் காட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சுகம், ஜீவன், வார்த்தை, இரட்சிப்பு நான்கும் கிடைத்தது. நான்கு வீடுகள், நான்கு சந்திப்புகள், நான்கு ஆசீர்வாதங்கள்.

இன்றைக்கும் நாம் இயேசுவை நம் வீட்டிற்கு அழைத்து அவர் கூறிய வார்த்தைகளின்படி செய்வோமானால், அவரும், அவருடைய வார்த்தைகளும் நம்மை உயர்த்தும். வார்த்தைகள் என்று சொல்லும்போது கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கப்போகிறதான வசனம் என்னும் வார்த்தைகளைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவம் போக ஞானஸ்நானத்தின் மூலம் கழுவப்படுவோமானால் நாம் இரட்சிக்கப்பட்டு இயேசு நம்மை அவருடைய சபையில் சேர்ப்பார். ஒரு வேளை நாம் அவருடைய சபையில் அங்கமாக இருப்போமானால் என் னென்ன காரியங்கள் செயப்பட வேண்டும் என்று வசனம் சொல்லுகிறதோ அதைச் செய்வோம். அப்போதுதான் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உண்மையாகவே, நம் குடும்பம் இரட்சிக்கப்பட வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கணவனுடைய குணத்தினாலும், மனைவியினுடைய பரிசுத்தத்தினாலும் நன்மையான காரியங்கள் குடும்பத்தில் கிடைக்க வேண்டும். இவை எப்படி கிடைக்குமென்றால் நம் குடும்பத்தில் இயேசு இருக்க வேண்டும். நாம் ஆயத்தமா? ஆமென்.

●

வாலிபர் பகுதி

# கழந்து கொள்ளுங்கள்

**சகோ. சேகர்**

பரிசுத்த தேவனுக்கும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் மகிமையுண்டாவதாக. வாலிபர்களாகிய உங்களுக்கு நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நல்வினை, தீவினை, நன்மை, தீமை, நல்லோர், தீயோர் என்று அறிந்து அதன் வழி நடந்துகொள்ள ஆசையானால், எதை ஏற்பது எதைக் கடிந்துகொள்வது. யாரை ஏற்பது, யாரை வெறுப்பது என்று உணர்ந்து செயல்பட வேண்டுமானால் எல்லோருக்கும் நல்லவராம் இயேசுவிடம் திரும்பி அவர் வார்த்தைகளை அறிவது நல்லது. நீங்கள் கிறிஸ்துவாகிய இரட்சகரை அறிந்திருப்பது மகிழ்ச்சியே. அவருடைய வார்த்தைகளிலிருந்து ஆலோசனைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

## I. அந்தகார அதிகாரத்தைக் ( அதிபதியை ) கடிந்து கொள்ளுங்கள்

அந்தகாரம் என்பது காரிருள் சூழ்ந்த இவ்வுலகைக் காட்டுகிறது. மனிதன் எவ்வளவு பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கின்ற மின்விளக்கை உருவாக்கி அதில் மனமகிழ்ச்சியாய் வாழ்ந்தாலும், அவன் இருளுக்குள், இருளின் அதிகாரத்திற்குள் இருக்கிறான் என்பது மறுக்கமுடியாத உண்மை. மனுஷன் ஆசை இச்சைகளுக்கு அடிமைப்பட்டு, பாவ சந்தோஷங்களில் சிறைப்பட்டுக் கிடப்பது அந்தகாரத்தின் அதிகாரமாயிருக்கிறது. மனுஷன் தேவனை மறந்து சிருஷ்டிகரை நினையாமல் சிருஷ்டியைச் சேவிப்பதும் உணர் வில்லாதவர்களாய்த் தங்கள் இருதயங்களை இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுப்பது, சுபாவ அன்பில்லாதவர்களாயும், தாய் தகப்பன்மாரை கனம் பண்ணாதவர்களாயும், இணங்காதவர்களாயும், இரக்கமில்லாதவர்களாயும் அந்தகார அதிகாரத்திற்கு அடிமைப்பட்டவர்களாய் விடுதலையின்றி இன்னல் களில் சிக்கித்தவிக்கின்றனர். ஆனால், வாலிபர்களாகிய நீங்களோ, இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, சுயாதீனமுள்ளவர்களாய் தேவனுடைய ராஜ்யமாகிய சபையில் சங்கமித்திருக்கும் நீங்கள் இருளின் அதிகாரத்திற்குக் கீழானவர்களல்ல.

### a. அந்தகார அதிகாரத்தைக் கடிந்து கொள்ளும் இயேசு

இயேசுவானவர் பிசாசினால் சோதிக்கப்படுகின்ற போது, அப்பாலே போ சாத்தானே என்று கடிந்துகொண்டார். (மத் 4 ம் அதி) இப்படி அந்தகாரத்தின் அதிபதியையும், அவன் அதிகாரத்தையும் கடிந்துகொண்டு இயேசு தேவசித்தம்

மட்டுமே சிந்தித்தார். பிசாசை ஜெயங்கொள்ளுகிறவராய் இருந்தார். உடனிருந்தவர்களை, சிநேகிதர், சீஷர், சகோதரர் என்று இவ்விதமாக அழைத்த தம்முடையவர்கள் தன்னில் அன்புகூர்ந்து இயேசுவுக்கு எந்தத் தீங்கும் நேர்ந்திடக் கூடாது என்று நினைத்து எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய சிலுவை மரணத்தைப் பற்றி: பேதுரு, ஆண்டவரை நோக்கி. ஆண்டவரே இது உமக்குச் சம்பவிக்கக்கூடாது என்று சொன்னான். அதற்கு இயேசு அப்பாலே போ சாத்தானே என்று கடிந்து கொண்டார். அப்படியானால் தேவசித்தத்திற்கு எதிராக சுயநலம் தேடும்போது அது சாத்தானுடைய செயலாக, அந்தகாரத்தின் அதிகாரமாக இருக்கிறது. பாருங்கள்! அந்தகாரத்தின் அதிகாரம் யாரைக் கொண்டு செயல்படுகிறது என்று. ஆம், கூடவே இருக்கின்ற சிநேகிதர், நம் நலம் விரும்பிகளாக இருப்பவர்களால் கூட அந்தகாரத்தின் அதிகாரம் செயல்படும். நமக்கு நன்மை செய்வதாகக்கூட அந்தகாரக் கிரியை செயல்பட லாம். நாம் சபைக்கும் ஆராதனைக்கும் செல்லும்போது, நம்முடைய நண்பர்கள் நம்மை திசைதிருப்ப மாம்சத்துக்கேற்ற மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி களுக்கு நம்மை உற்சாகப்படுத்துவார்கள். சகோதரரே நயங்காட்டினாலும் அவர்களுக்கு இணங்க வேண்டாம். அந்த அழைப்பு அந்தகாரத்தின் அதிகாரமாயிருக்கிறது. நம்முடைய நம்பிக்கையிலிருந்து நம்மை திசை திருப்பும் வஞ்சகனின் செயல். ஆகவே, இயேசுவானவர் தேவச் சித்தம் நிறை வேற தம்மை எப்படி ஒப்புக்கொடுத்தாரோ அப்படியே நாமும் ஒப்புக் கொடுப்போம். ஆண்டவர் எப்படி அந்தகாரத்தின் அதிகாரங்களைக் கடிந்துகொண்டாரோ, அப்படியே நாமும் கடிந்து கொள்ளுவோம்.

## II. அந்தகாரக் கிரியைகளைக் கடிந்துகொள்ளுங்கள்

ஒளியானது எப்பொழுதும் இருளை மேற்கொள்ளுகிறது. இருளின் மேல் அதிகாரம் செலுத்துகிறது. ஒளியைக் கண்டால் இருள் மறைந்து கொள்ளுகிறது. ஒளியினிடத்திலிருந்து இருள் ஓடிப்போகிறது. இருள் எப்பொழுதும் ஒளியைப் பகைக்கின்றது. ஆகவே இருளுக்குள் வாழ்கிறவர்களும் ஒளியைப் பகைக்கிறார்கள். ஆண்டவர் சொல்லுகிறார், பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். ஏன் பகைக்கிறான் என்றால் தன் பொல்லாத கிரியைகளை ஒளி கண்டிக்கிறபடியால் தான் ( யோவா. 3:20,21 ). மேலும் ஒளியைக் கண்டு ஓடுகிறான். சத்தியத்தின்படி செய்கிறவன் தன் கிரியைகள் தேவனுக்குள் (ஒளிக்குள்) செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினி டத்தில் வருகிறான். நற்கனி தேடி நம்மில் வந்திருக்கும் இயேசுவுக்கு நாம் எப்படிப்பட்ட கனிகளைக் கொடுக்கிறோம். ஆவியின் கனிகளில் பிரியப்படுகின்ற ஆண்டவருக்கு நற்கனிகளைக் கொடுக்கிறோமா? அல்லது கசப்பான கனி களைக் கொடுத்து ஆண்டவரைத் துக்கப்படுத்தி அவர் கோபத்துக்கு ஆளாகி றோமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின் படியே, அவருடைய சிந்தையில் இருள் இல்லை, அவருடைய வார்த்தையில்

இருள் இல்லை, அவருடைய செயல்களில் இருள் இல்லை. நாம் அவரிடத்தில் கேட்டு கற்றுக்கொண்டவைகளில் எவ்வளவேனும் இருளில்லை. ஏனெனில், அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.

## a. அந்தகார உலகத்தில் நாம் ( I கொரி 5:9,10 )

பொதுவாக இந்த உலகம் எப்படியிருக்கிறதென்றால், பாவம் நிறைந்தே காணப்படுகிறது. யாரால் நிரப்பப்பட்டிருக்கிறதென்றால் விபச்சாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் போன்ற பாவங்களில் ஒப்புக்கொடுத்து வாழ்கிறவர்களாலே இந்த உலகம் நிறைந்து காணப்படுகிறது. தேவன் கிறிஸ்தவர்களுக்கென்று தனி உலகத்தைக் கொடுக்கவில்லை. நாமும் இந்த இருள் சூழ்ந்த உலகத்தில்தான் வாழ்கிறோம். ஆனால், அவைகளைக் கடிந்துகொண்டு, அவைகளுக்கு இடங்கொடுக்காமல் விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும். தேவனும் நமக்குத் துணைநிற்பாராக! ஆமென் விக்கிரகாராதனைக்கும் வேசித்தனத்துக்கும் விலகி ஓடவேண்டும். அவைகள் என்ன செய்துவிடுமென்று நாம் அவைகளில் எதிர்த்து நிற்கக் கூடாது. அப்பாலே போ சாத்தானே என்று கடிந்துகொள்ள வேண்டும். நம் முடைய சரீரங்கள் கிறிஸ்துவினுடைய நீதியின் ஆயுதங்களாக இருக்கிற படியால் நீதிக்கேற்ற கிரியைகளில் செயல்படவேண்டும். நம்முடைய சரீரம் அநீதியின் ஆயுதங்களாக இருக்குமேயானால் நீதிக்கு விரோதமாக, ஒளிக்கு எதிராக தேவபகைஞராகவே காணப்படுவோம். நம்மில் காணப்படும் கனிகளும் கசப்பானவைகளாகவே காணப்படும். ஆம், இப்படிப்பட்ட நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும், இப்படிப்பட்ட மரங்களின் வேர் அருகே கோடாரியானது வைக்கப்பட்டுள்ளது. கனிகளுக்குக் காரணமாயிருப்பது வேர். அந்தக் கசப்பான வேரை வெட்டினால் கசப்பான கனி இனிவராது. அதுபோல மனுஷனுடைய பொல்லாத கிரியைகளுக்கு (கசப்பான கனிகளுக்கு) காரணமாயிருப்பது இருதயம். இப்படிப்பட்ட இருதயத்திலிருந்து தான் பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், உருவாகும் என்பதினால் அப்படிப்பட்ட இருதயமும் வெட்டிப்போடப்படும். எனவே இப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தை நாம் கடிந்துகொள்ள வேண்டும்.

## b. ஆச்சரியமான ஒளிக்குள் நாம்

மேலும், பாவிகள் நயம் காட்டினாலும் அவர்களுக்கு இணங்காமல், கனியற்ற அந்தகாரக் கிரியைகளைக் கடிந்துகொள்ள வேண்டும். பாவிகளால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சண மாயிருக்கிறதே! சில நேரங்களில் இப்படிப்பட்ட கிரியைகளைச் சொல்லி சந்தோஷப்படுகிறவர்கள் இருக்கவே செய்கிறார்கள், இது தவறு. எனவே, கிறிஸ்தவர்களின் சிந்தனை, பேச்சு, செயல்கள் எதிலும் இதுபோன்ற அந்தகாரக் கிரியைகள் காணப்படாமல் பரிசுத்தமான விசுவாசத்தில் உறுதியாய்

வாழவேண்டும். நாம் எல்லோரும் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக் கிறோம். நம்மில் யாரும் எப்பொழுதும் அவர் பார்வையினின்று மறைந்திருக்க முடியாது. சகலமும் அவர் பார்வையில் வெளியரங்கமாயும், நிர்வாணமாயும் இருக்கிறது. எனவே எல்லாவற்றையும் நியாயத்தில் கொண்டு வருவார் என்று அறிந்து பயந்தோடே நம்முடைய விசுவாசத்தைப் பூரணப்படுத்தக் கடவோம்.

அன்பான இளம் வாலிப நெஞ்சங்களே இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கி தேவனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபையில் உங்களை தூணும் ஆதாரமுமாக நிறுத்தியிருக்கிறார். இருளின் அதிகாரத்திற்கு கீழானவர்களாக அல்ல, ஒளியின் பிள்ளையாக உங்களை உருவாக்கி யிருக்கிறார். ஆகவே, கிதியோனைப்போல உங்கள் பெலத்தோடே ஆண்டவரின் காரியத்துக்காக புறப்படுங்கள். செயல்படுங்கள். ஆமென்! ●

---

உங்களால் சிலர்செய்வது போல்
செய்ய முடியாமல் போகலாம்

உங்களால் மற்றவர்களை விட
அதிகமாகவும் செய்ய முடியலாம்

ஆனால் நிச்சயமாக உங்களால்
மிகச் சிறந்ததைச் செய்ய முடியும்.

## தேவனுடைய ராஜ்யத்தின் நன்மைகள்:

1. தேவனுடைய ராஜ்யம் தேவனை ஆதாரமாகக் கொண்டது. அது ஒரு போதும் அழிக்கப்படுவதில்லை (தானியேல் 2:28).

2. தேவனுடைய ராஜ்யம் உலகெங்கும் பரவியிருக்கிறது அதற்கு தேச அல்லது இன எல்லை இல்லை (மாற்கு 16: 15; மத்தேயு 28;19).

3. தேவனுடைய ராஜ்யம் சீடர்கள் உயிரோடிருக்கும் போதே ஸ்தாபிக்கப்படும் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (மாற்கு 9: 1).

4. தேவனுடைய ராஜ்யத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு சகல அதிகாரமும் உண்டு (மத்தேயு 28:18).

5. தேவனுடைய ராஜ்யத்தில் ஒருவர் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பிரவேசிக்க முடியாது (யோவான் 3:5).

சிறுவர் பகுதி

# தொல்பொருள் ஆராய்ச்சியும், வேதாகமும்

**சகோ. ஏபில் நாயகம்**

**எ**னதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் இச்சிறுவர் பகுதி மூலமாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் நாம் வேதாகமும், அதின் காரியங்களும் உண்மையென்று சில ஆதாரங்களைக் கொண்டு படிக்கவிருக் கிறோம். சரி, நாம் பாடத்திற்குள்ளாக கடந்து செல்வோமா!.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையை மட்டுமே கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதனால், அதில் சொல்லப்பட்டிருக்கும் எந்த சம்பவங்களானாலும், அதில் உள்ள எல்லாமே உண்மையாக இருக்க வேண்டும். வரலாறுகளில் நாம் பார்க்கும் பொழுது, எல்லா காலங்களிலும் வேதாகமும் அதிலுள்ள யாவும் சரியே என்று தொல்பொருள் ஆராச்சி கூறுகிறது. (தொல் பொருள் ஆராச்சி என்பது–ஆதிகால பொருட்களின் ஆராச்சி) சரி, அது எப்படி என்று மூன்று உதாரணங்களைக் கொண்டு பார்ப்போம்.

**முதலாவதாக,** மோசே தான் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதினார் என்று நாம் வேதத்தின் மூலம் அறிகிறோம். தேவன் உரைத்ததை எல்லாம் மோசேஎழுதினதினால், இதை மோசேயின் பிரமாணங்கள் என்றும் கூறுகிறோம் (யாத். 17:14) ஆனால், வேதத்தை நம்பாத சில கூட்ட ஜனங்கள் மோசே, முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதியிருக்க வாப்புகள் இல்லையென்று கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால், அந்தக் காலத்திலே எழுதும் கலை கண்டுபிடிக்கப்பட வில்லையென்று கூறுகின்றனர். ஆனால், 1933-ம் ஆண்டில் J.L. STARKEY என்பவர் ஒரு பழமையான பட்டணத்தைக் கண்டுபிடித்து அதை யோசுவா கைப்பற்றிய கானான் தேசத்தில் இருந்ததாகக் கூறுகிறார். அந்தப் பட்டணத்தின் பெயர் ( Lachish ) லாகிஸ். அந்த லாகிஸ் என்ற இடத்திலே STARKEY என்பவர் மண்ணால் செயப்பட்ட ஒரு பானையின் மீது பதினோரு எழுத்துக்கள் செதுக்கியிருப்பதைக் கண்டார். அந்த எழுத்துக்கள் எபிரெய மொழி என்பதையும் கண்டுபிடித்தார். அந்த சம்பவத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, பிரான்சு நாட்டைச் சார்ந்த தொல்பொருள் ஆராச்சியாளர்கள் மோசே பிறப் பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட சில சுவடுகளிலிருந்த எழுத்துக்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே, மோசேயின் காலத்திற்கு முன்பாகவே எழுதும் கலை இருந்துள்ளது. ஆகையால், இந்த ஐந்து

புத்தகங்களையும் மோசே தான் எழுதினார் என்பதற்கு இவைகள் சான்றாக இருக்கின்றன. இந்த உண்மையை மோசேஇப்புத்தகங்களை எழுதவில்லை என்று கூறுகிறவர்கள் கூட ஒப்புக் கொள்ள முடியும்.

**இரண்டாவதாக,** சிலர் ஏசாயா புத்தகத்தில் ராஜாவாகிய சர்கோன், அசீரியாவின் ராஜாவாக (20:1) இருந்துள்ளான் என்பது பற்றி தவறாக எழுதியுள் ளார் என்று கூறுகின்றனர். ஏன் என்று அவர்களைக் கேட்டால், வரலாறு அப்படி ஒரு ராஜாவை குறிப்பிடவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 1843ம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த இரண்டு தொல்பொருள் ஆராச்சியாளர்கள் (Paul Botta, Austen) சர்கோன் ராஜாவின் அரண்மனையை முழுவதும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையும், பட்டணங்களும் 706 கி.மு. வில் கட்டப்பட்டது என்பதையும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையின் சுவர்களில் ராஜாவைப் பற்றிய குறிப்புகளும், காலங்களும் எழுதப்பட்டுள்ளன. இன்றைக்கும் அந்தச் சுவரின் சில பகுதிகள் Oriental Institute என்ற பல்கலை கழகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. எனவே ஏசாயா தவறு செய்துவிட்டார் என்று எவரும் சொல்ல முடியாது.

**மூன்றாவதாக,** ஏத்தியர்கள் என்ற ஒரு கூட்ட ஜனம் வேதத் தில் 40 முறை குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருமுறை சீரியர்களை இஸ்ரவேலிருந்து துரத்தினவர்கள் (II ராஜா 7:6). ஆனால், வேதாகமத்தை ஒத்துக்கொள்ளாத சில பேர் ஏத்தியர் என்ற ஜனம் இல்லவே இல்லை என்கின்றனர். ஆனால் 1800களில் தொல்பொருள் ஆராச்சியாளரான Hugh. A.H. Sayce என்பவர் சீரியா பட்டணத்தில் கண்டுபிடித்த சில எழுத்துக்களை ஆராய்ந்த பொழுது அதில் ஏத்தியர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார். பின்பு 1906 ஆம் ஆண்டு Hugh Wincklar என்பவர் ஏத்தியர்களின் தலைநகரம் தற்போதைய துருக்கியில் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார். மேலும், அந்த இடத்திலிருந்து பத்தாயிரத் திற்கும் மேற்பட்ட கல் சுவடுகளைக் கண்டுபிடித்தார். எனவே வேதாகம் தவறு என்று நாம் ஒருபோதும் கூறவே முடியாது.

கடைசியாக, எனதருமைத் தம்பி தங்கைகளே! இந்தத் தொல்பொருள் ஆராச்சியின் மூலம் கண்டறிந்ததில் வேதாகமத்தின் அனைத்து சம்பவங்களும் உண்மையே என்று தொல்பொருள் ஆராச்சியாளர்கள் கண்டிப்பாக ஒத்துக் கொள்கிறார்கள். அவர்கள் கண்டுபிடிக்கும் எல்லாக் காரியங்களும் வேதத்தோடு ஒத்துப்போகிறதேயல்லாமல், முரண்படுவதில்லை. எனவே தேவன் நமக்குக் கொடுத்த இந்த பொக்கிஷமாகிய வேதாகமத்தை உண்மையென்று நம்பாத வர்களிடத்தில், நாம் இது போன்ற காரியங்களை எடுத்துக்கூறி அவர்களை தேவ னுடைய வார்த்தைகளை நம்பும்படியாக மாற்ற வேண்டியது நம்முடைய கடமை. ஆகையால் நீங்கள் இந்த சிறுவயதிலிருந்தே இதுபோன்ற காரியங்களைச் செய்து தேவனுக்குப் பிரியமானதொரு வாழ்க்கை வாழ்ந்து அவரிடத்தில் ஆசீர்வாதம் பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ●

# எல்லோரும் ... திருப்தியடைந்தார்கள்

சகோ. K.M. பிலிப்

அன்பான வாசகர்களே! உங்கள் யாவருக்கும் உயிர்த்தெழுந்த இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் வாழ்கின்ற இந்த வாழ்க்கை அனுதினமும் திருப்தியாயிருக்கவேண்டும் என்பதே நமது விருப்பம். நாம் மட்டுமல்ல நம்மைச் சார்ந்தவர்களையும் திருப்திசெய்வது மாபெரும் மகிழ்ச்சியல்லவா? ஓர் இளம் வாலிபன் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாய் படுத்தி தானும் திருப்தியடைந்தான். தன்னைச் சார்ந்தவர்களையும் திருப்திபடுத்தினான்.இயேசுவும் திருப்தி அடைந்தார். இச்சரித்திரம் வேதத்தில் நான்கு சுவிசேசங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் இயேசுவின் அற்புதங்களில் ஒன்று. (மத் 14 : 13-21; மாற் 6 : 32 – 44 ; லூக் 9 : 11 – 17 ; யோவான் 6 : 1 – 14).

தன்னிடத்தில் வந்த திரளான மக்களுக்கு இயேசு மாலை வரை உபதேசிக்கிறார். மன உருக்கமுள்ள இயேசு அவர்களைப் பசியோடு அனுப்ப மனமில்லாமல் அக்கூட்டத்தில் இருந்த ஒருபையன் ( யோவான் 6 : 9 - ல் ஆங்கிலவேதத்தில் LAD = Young boy = இளம் வாலிபன்) கொடுத்த மிகச்சிறிய அளவான 5 அப்பம், 2 மீன்களை ஆசீர்வதித்து அதைக்கொண்டு 5000 பேருக்கும் அதிகமான மக்களுக்குத் திருப்தியான ஆகாரம் கொடுக்கிறார். இங்கு பரிசுத்த ஆவியானவர் அறிமுகப்படுத்தும் இச்சிறுவனின் இச் சீரிய செயலைப் போலவே, நம்முடைய சீரிய செயல்களின் மூலமாக இந்த வாழ்க்கையில் நாமும் திருப்தியடைந்து, மற்றவர்களையும் திருப்திபடுத்தும் நற்காரியங்களை செய்து, தேவனையும் திருப்திபடுத்துவோம்.

**சீரியசெயல் 1 : இயேசுவின் வார்த்தைக்கு முதலிடம் கொடுத்தான்.**

நண்பர்களோடு சேர்ந்து தன் மனவிருப்பம் போல் நேரத்தை செலவிடும் இளம் வயதில், இவ்வாலிபன் இயேசுவுக்கும், அவருடைய வார்த்தைக்கும் முதலிடம் கொடுத்து, கால்நடையாய், ஓடி, அவருக்கு முன்னே அங்கு சேர்ந்து அவரிடத்தில் கூடிவந்தான் ( மாற் 6:33 ). அவன் தன் சிந்தனையில் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்ததால், சொந்த விருப்பங்களோ, நேரமோ, தூரமோ இயேசுவிடம் வர அவனுக்கு தடையாயிருக்கவில்லை. இச்சீரிய செயலை உற்றுநோக்கிய இயேசுவும் அவனைக் கொண்டு அநேகரைத் திருப்திப்படுத்தி இன்றுவரை அவனை கனப்படுத்தி வருகிறார். அன்பான வளரும் வாலிபர்களே! சீரழிந்து கொண்டிருக்கும் இச்சமுதாயத்தில் திருப்தியற்ற வாழ்க்கை வாழ்ந்து

கொண்டிருக்கும் உங்கள் வாழ்க்கையில் இயேசுவின் வார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். அப்பொழுது எல்லாம் கூடக் கொடுக்கப்படும் ( மத் 6:33 ). இச்சிறுவன் வரும்பொழுது ஐந்து அப்பம், இரண்டு மீன்களுடன் வந்திருந்தான் என்பதில் இவனுடைய பக்தியுள்ள தாய் நம் கண்முன் நிற்கிறாள். தன்பிள்ளை வாலிப வயதில் சிருஷ்டிகரை நினைக்கவும் ( பிர 12:1 ) வாலிபன் தன்வழியை அவருடைய வார்த்தையினால் மட்டுமே சுத்தமாய் காத்துக் கொள்ள முடியும் (சங் 119:9 )என்பதை உணர்ந்த அந்த தாய் தன் இளம் வாலிப பிள்ளையை இயேசுவினிடத்தில் அனுப்பிவைத்தாள்.

அன்பான பெற்றோரே! நம்பிள்ளைகளை சபையில் ஒப்புக்கொடுத்து, அவருடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுக்க கற்றுக்கொடுத்தால் அவனுடைய வாழ்க்கை எல்லோரையும் திருப்திபடுத்தும்.

**சீரிய செயல் 2: இயேசுவின் வார்த்தையைத் கேட்க விருப்பத்தோடே வந்தான்**

கால்நடையாய், ஓடி, இயேசு வருவதற்கு முன் அவ்விடத்திற்கு வந்தான் என்பது, இயேசுவின் வார்த்தையைக் கேட்பதில் அவனுக்கிருந்த விருப்பம் வெளிப்படுகிறது. அன்று விருப்பத்தோடு தேவாலயத்தில் வந்து அமர்ந்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டதால் சூம்பின கையுடையவனது கை பெலப்பட்டது (லூ 6:6-10). தன் வருமானத்திற்குரிய வேலையைக் கூட விட்டு விட்டு இயேசுவின் வார்த்தையை பவுல் மூலம் கேட்க விருப்பத்தோடு வந்ததால் லீதியாளின் குடும்பம் இரட்சிக்கப்பட்டது (அப் 16:13-15 ). விருப்பமில்லாமல் கேட்ட பெலனுள்ள வாலிபன் ஐத்தீகு, தூங்கிவிழுந்து மரித்தவனாக எடுக்கப்பட்டான் ( அப் 20:9 ). பல சூழ்நிலைகளால் தாக்கப்பட்ட தாவீது தன் அநுபவத்தில் சொல்கிறார், “ உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு சமாதானம் உண்டு. அவர்களுக்கு இடறலில்லை (சங் 119:165), நாள் முழுவதும் அது என் தியானம் (119:97 ) என்கிறார். ஆம் விருப்பத்தோடு வந்த இளம் வாலிபனை இயேசு 5000க்கும் அதிகமான மக்களை திருப்தி செய்யும் சாதனையாளனாக மாற்றினார். “கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்யவான் .... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும், “ சங் 1:2,3 அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கை திருப்தியுள்ளதாயும், சாதனை பல படைத்து சமுதாயத்தையும் திருப்திபடுத்தக் கூடியதாயிருக்க இயேசுவின் வார்த்தைகளை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள்.” நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்யவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள் (மத் 5:6).

**சீரிய செயல் 3 : திட்டமிட்டு ஆயத்தமாய் வந்தான்**

விருப்பம் இருந்தாலும், அது சரியாய் நிறைவேற திட்டமிட்டு ஆயத்தத் தோடு செயல்பட வேண்டும். இவ்விளம் வாலிபன் 5 அப்பம், 2 மீனுடன், கால்நடையாய், மக்களோடு சேர்ந்து செல்லத் திட்டமிட்டான். ஆகவே

சரியான இடத்திற்கு சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்தான். இயேசுவின் வார்த்தையை முழுமையாய் கேட்பதற்கு பசி ஒருதடையாய் இருக்கக் கூடாதென்று 5 அப்பம், 2 மீனுடன் ஆயத்தமாய் வந்தான். திட்டமிட்டு ஆயத்தத்தோடு செயல்பட்டால் நம்மை எதுவும் தடை செய்யமுடியாது. மணவாளனை எதிர் கொண்டு சென்ற 10 கன்னிகளில் புத்தியுள்ள ஐந்து பேர் திட்டமிட்டு ஆயத்தமாய் தீவட்டியோடும், எண்ணையையும் கொண்டு சென்றதால் மணவாளனோடு கலியாண வீட்டிற்குள் பிரவேசிக்கும் பாக்யம் பெற்றார்கள். ஆம், ஜாக்கிரதையுள்ள ஆத்துமாவோ புஷ்டியாயிருக்கும் (நீதி. 13 : 4 ) இந்த வாலிபனின் பிரயாசத்தைக் கண்ட இயேசு அவனை தன்னோடு இணைத்துக்கொண்டு அனைவரையும் திருப்திபடுத்தினார்.

அன்பான தேவ பிள்ளையே! நம்முடைய பக்திக்குரிய காரியங்களில், வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, சபைகூடி வருதல், காணிக்கை கொடுத்தல், குடும்ப ஜெபம், ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்தல் இவைகளில் சரியாய் திட்டமிட்டு ஆயத்தத்தோடு செயல்பட்டால் தடைகள் தகர்க்கப்படும். இயேசு உங்களோடு இணைந்து உங்கள் வாழ்க்கையைத் திருப்திப்படுத்துவார். " இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் " என்று இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார் (மத்28:20) .

**சீரிய செயல் 4 : இயேசுவின் வார்த்தையைக் கேட்பதில் முழுமையான ஈடுபாட்டுடன் இருந்தான்**

' பசி வந்தால் 10-ம் பறந்துபோகும் ' என்பது நம் பழமொழி. ஆனால் இந்த வாலிபனிடம் 7-ம் (5+2) அப்படியே இருந்தது. இயேசு சாயங்காலம் வரை தொடர்ந்து உபதேசித்தார். ஆனாலும் பசி கூட தெரியாமல் இச்சிறுவன் முழு ஈடுபாட்டோடு இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிந்ததால் 5 அப்பமும் 2 மீனும் அப்படியே இருந்தது. அவன் தன் வாயால் புசிப்பதற்குப் பதிலாக இயேசுவையே பார்த்துக் கொண்டிருந்ததால் கண்களால் புசித்தான்: அவர் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்ததால் காதுகளால் புசித்துக் கொண்டிருந்தான், அதினால் அவன் தன் ஆத்துமாவில் திருப்தி அடைந்தான். ஆம் " மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் " (மத்4:4) என்பதற்கு இவன் ஒரு சான்றாக விளங்கினான். இன்று தேவனுடைய வார்த்தையை கேட்பதில், ஆராதனை, ஜெபம் ஆகிய நிலைகளில் நம் அசட்டையைக் குறித்து, " அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது (மத் 15:8 ) என்று பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையின் அதிருப்திக்கான காரணத்தைச் சுட்டிக் காட்டு கிறார். இங்கு ஆத்துமாவில் திருப்தி அடைந்த இந்த சிறுவனின் சரீரப்பசியை இயேசு திருப்தி செய்தார்.

அன்பானவர்களே! " உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன்முழு

இருதயத்தோடும், உன்முழு ஆத்துமாவோடும், உன்முழு மனதோடும், உன்முழு பெலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை (மாற் 12:30 ) இப்பிரதான கற்பனையை நிறைவேற்றுவோம். தேவன் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் திருப்தியாக்குவார்.

**சீரிய செயல் 5 : தன்னிடம் உள்ளதை முழுமையாய் கொடுத்தான்**

இந்த இளம்வாலிபன் 5 அப்பம் 2 மீன்களை தனக்கென்று கொண்டுவந்தான். ஆனால் " உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக " (மாற் 12:31) என்ற இயேசுவின் போதனை அவனைக் கொடுக்கும்படி மாற்றியது. " கர்த்தரை நம்பி நன்மை செய்யத் தூண்டியது ( சங் 37:3 ). தன்னிடமிருந்ததை முழுமையாய் இயேசுவிடம் கொடுத்துவிட்டான். " இயேசு எப்பொழுது கேட்பார் " என்று எதிர்பார்த்து இருந்தவனைப் போல கேட்டவுடன் கொடுத்துவிட்டான். அதனால் அநேகர் திருப்தி அடைந்தார்கள். இயேசு அவனை விட்டுவிடவில்லை. இவ்விளம் வாலிபனும் திருப்தியாய் சாப்பிட்டான். நன்மை செய்த அவனை நானிலம் உள்ளவரை போற்றும்படி புகழ்ச்சியாய் வைத்திருக்கிறார். ஒருவேளை அவன் கொடுக்கவில்லையென்றாலும் அத்திரளான மக்களை இயேசு திருப்தியடையச் செய்திருப்பார். ஆனால் இவன் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கொடுத்து, நன்மை செய்வதை நிறைவேற்றி ஜீவபுஸ்தகத்தில் இடம் பெற்றான்.

அன்பான தேவஜனமே! தேவன் நம்மை பயன்படுத்தி இவ்வுலக மக்களை ஆத்துமாவில் திருப்திபடுத்த விரும்புகிறார். இச்சிறுவனின் சீரிய செயல்களைச் சிந்தியுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஜீவனும் வல்லமையுமான தேவனுடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுத்து செயல்படுங்கள். பிதாவாகிய தேவன் உங்களை நீடித்த நாட்களால் திருப்தியாக்குவாராக.

ஆமென்.

---

## நாளும், நடப்பும்

1. கர்நாடக முதல்வரின் காவிரி பேச்சு கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது– ஜி.கே.வாசன்.
2. இந்தியாவுக்கு யுரேனியம் வாங்க ஆஸ்திரேலியா கடும் நிபந்தனை.
3. 2.42 லட்சம் கோடிக்கு முதலீட்டு ஒப்பந்தங்கள்– தமிழக அரசு.
4. இந்தியை மறந்தால் நாட்டுக்குத்தான் இழப்பு – பிரதமர்.
5. பீகார் சட்டப் பேரவைக்கு 5 கட்டத் தேர்தல்.
6. எல்லையில் இந்தியா முதலில் தாக்காது– உள்துறை அமைச்சர்.

# விதைக்கிறவன் உவமையில் சபை!

சகோ. K. பாஸ்கர்

அன்பான வாசகர்களே! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகள். இம்மாத கட்டுரையில் ஆண்டவர் இயேசு சொன்ன விதைக்கிறவன் உவமை மூலமாக சபை பற்றிய உண்மைகளை நாம் படித்து அறிந்து கொள்வோமாக! இந்த உவமை மூலமாக ஏற்றுக்கொள்பவர், ஏற்றுகொள்ளா தவர் ஆகியோரை பற்றிப் படிப்போம்!

## I. உவமை

நமது பாடத்தில் வழக்கமாக ஆண்டவர் இயேசுகிறிஸ்து சொன்ன உவமையைப் படிப்போம். " அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்; கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிர மாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து , சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்" (மத்-13: 3-9).

## II. பரலோக ராஜ்யம் என்பது என்ன?

ஆண்டவர் இந்த உவமையின் ரகசியத்தைச் சொல்லுகிறார். பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி இதன் விளக்கத்தைச் சொல்லுகிறார் ( மத்.13:11). பரலோக ராஜ்யம் என்று யூதர்களுக்கு மத்தேயு எழுதுகிறார். இந்தப் பரலோக ராஜ்யத்தை லூக்கா என்ற வைத்தியர் கிரேக்கர்களுக்கு எழுதும்போது தேவனுடைய ராஜ்யம் என்று எழுதுகிறார். இதையே அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது கிறிஸ்துவின் சபை என்று தெரியப் படுத்தினார். (எபே.5:5: ரோமர் 16: 16). எனவே விதைக்கிறவன் உவமையில் ஆண்டவர் கிறிஸ்துவின் சபையைச் சொன்னார் என்பதை நாம் உணருகிற வர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சபையை நாம் காதாரக்கேட்டும் உணராமலும் கண்ணாரக் கண்டு அறியாமலும் இருக்ககூடாது (மத்.13:14,15) எனவே பரலோக ராஜ்யம் என்பது சபைதான் என்பதை நாம் புரிந்து கொள்வோமாக!

III. **ஏற்றுக்கொள்ளாதவர்கள் (சபையை ஏற்றுக்கொள்ளாதவர்கள்)**

இந்த உவமையை ஆண்டவர் ஆரம்பிக்கும்போது கேளுங்கள் என்று சொல்லுகிறார். அதாவது வசனத்தைக் கேட்கவேண்டும் என்கிறார். ஏனென்றால் கேட்டலின் மூலமாக விசுவாசம் வரும்(ரோம்.10:17). நாம் வசனத்தை ஒரு காது வழியாகக் கேட்டும் மறுகாது வழியாக விட்டுவிடாதபடிக்கு அதை இருதயத்திற்குள் அனுப்பி சிந்திக்கவேண்டும். எனவே கேட்டல் என்பது முக்கியம். ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் இருதயத்தில் உணரா திருக்கும்போது பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப் பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான். அவனே வழியருகே விதைக்கப்பட்டவன் (மத்.13:19). இதையே லூக்கா எழுதும்போது அவர்கள் வசனத்தை விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான் என்று எழுதியிருக்கிறார் (லூக்.8:12) இவ்வுலகம் பொல்லாங்கனுக்குள் (சாத்தான்) கிடக்கிறது என்று வேதம் கூறுகிறது. ( I யோவா.5:19). ஆனாலும் அதனை ஜெயிக்க முடியும் என்று வேதம் கூறுகிறது. எப்படியெனில் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தால் ( ஞானஸ்நானம் ) அவனை ஜெயிக்க முடியும் ( I யோவா.5:18). ஆனால் மறுபடியும் பிறக்காதவர்கள் (ஞானஸ்நானம் பெறாதவர்கள்) சபைக்குள்ளாக இல்லை! இவர்களே வழியருகே விதைக்கப்பட்டவர்கள்.

IV. **ஏற்றுக்கொண்டும் நிலைநிற்காதவர்கள் (சபையில்)**

ராஜ்யமாகிய சபையின் வசனத்தைக் கேட்டவுடன் சந்தோஷத்துடன் உடனே ஏற்றுக்கொள்ளுகிறான், ஆனால் தனக்குள்ளே வேர் இல்லாமல் வசனத்தினி மித்தம் உபத்திரவம் துன்பம் வந்தவுடன் அவன் நிலைத்திராமல் போய்விடு கிறான். அவர்களே கற்பனையான இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் (லூக்கா. 8:13 ). வசனத்தை ஏற்று கிறிஸ்து இயேசுவுக்குள் வேர்கொண்டவர்களாக இருக்கவேண்டும் (கொலோ 2:6). உபத்திரவம் துன்பம் வரும் போகும், ஆனால் வசனம் மாத்திரம் நிலைத்திருக்கும் (2 தீமோ.2:9). உபத்திரவத்தில் கலங்காமல் திடன்கொன்டு உலகத்தை ஜெயிக்க வேண்டும் என்று ஆண்டவர் சொல்லுகிறார் ( யோவா.16:33 ). ஆனால், கற்பாறை போன்று மனதை வைத்துக்கொண்டு, வசனத்தைக் கேட்பதால் வேர் கொள்ளாமல் அதாவது கிறிஸ்துவுக்குள் நிலைத்திராமல் காணப்படுகின்றனர். இவர்களே கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள்.

V. **ஏற்றுக்கொண்டு நிலைத்திருப்பவர்கள் (சபையில்)**

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களு மாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதவும் பலன்கொடுக்கிறவர்களா

யிருக்கிறார்கள் (மத். 13:23). காரணம் என்னவென்று பார்க்கும்போது அவர்கள் வசனத்தைக்கேட்டு பொறுமையுடன் காத்திருக்கிறார்கள். தாவீது இப்படியாகச் சொல்லுகிறார்; கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவர் என்னிடமாய்ச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார் (சங் 40:1) என்று. நல்ல நிலத்தைப் போன்றவர்கள் பக்கம் தேவன் சாய்ந்து அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார் (அப்.10:1) இவர்களுடைய இருதயமாகிய நிலத்தில் கிறிஸ்து வாசமாயிருக்கிறபடியால், அவர்களுடைய இருதயம் கிருபையினாலே ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிறது. ( எபே.3:17). இப்படிப்பட்ட நல்ல நிலங்களை யுடையவர்களே நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் கொடுக் கிறார்கள். இந்த நல்ல நிலத்தைப்போன்ற இருதமுடையவர்களே கர்தரின் வல்லமையிலும், வசனத்தின் சத்தியத்திலும் பெலன் கொண்டவர்கள் (எபே 6:10) அந்தப் பெலனாகிய சுதந்திரம் அவர்களுக்காகப் பரலோகத்தில் வைக்கப் பட்டிருக்கிறது ( I பேது.1:5). இப்படிப்பட்டவர்களே நல்ல நிலம்.

## முயன்று பார்ப்போம்

| | | |
|---|---|---|
| ஏனோக்கைப் | போல் | நடவுங்கள் |
| ஆபேலைப் | போல் | ஆராதியுங்கள் |
| நெகேமியாவைப் | போல் | வேலை செய்யுங்கள் |
| எரேமியாவைப் | போல் | அழுங்கள் |
| யோபுவைப் | போல் | கீழ்ப்படியுங்கள் |
| தானியேலைப் | போல் | ஜெபியுங்கள் |
| பவுலைப் | போல் | வெற்றி பெறுங்கள் |
| கிறிஸ்துவைப் | போல் | வாழுங்கள் |

# சபையும் இடறலும்

**சகோ. K. பாண்டியன்**

'கிறிஸ்துவின் சபை' மனுஷரால் அல்ல, தேவனுடைய திட்டப்படி கிறிஸ்துவால் கட்டப்பட்டு அவருடைய உபதேசங்களுக்கு உண்மையாய் கீழ்படிந்தவர்களைக் கொண்டு தேவன் இன்றைய வரைக்கும் நடத்திக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட சபையிலும் " இடறல் " வரும் என்பதை நம் ஆண்டவர் இயேசுவும், அப்போஸ்தலர்களும் முன்னறிவித்துள்ளார்கள். இதைக்குறித்த சிக்கலான விஷயங்களை தேவனுடைய வார்த்தையின் உதவியால் நாம் கண்டு தெளிவடைய தேவன் தாமே நமக்குக் கிருபை செய்வாராக." என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு இடறல் உண்டாக்கு பவன் எவனோ, அவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்திலே அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும் " என்று சொன்ன இயேசுவானவர் தொடர்ந்து " இடறல் வருவது அவசியம் ஆனால் அதற்கு யார் காரணமோ அவர்களுக்கு ஐயோ " என்றும் எச்சரித்து இருக்கிறார் (மத் 18:6,7).

நாம் அறிந்தபடி " சபை " என்பது கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு தேவனால் "அழைக்கப்பட்ட கூட்டம் " ஆக இருக்கின்றது. அது மாத்திரமல்ல அவர்கள் ஒரே காரியத்தை பேசவும் பிரிவினையில்லாமல் ஏகமனதா யிருக்கவும் அழைக்கப்பட்டு இருக்கிறார்கள் (I கொரி 1:9,10) ஆனால் இப்படிப் பட்ட ஐக்கியம் குறைய வாய்ப்புள்ளது என்றும் அப்படி நடவாதபடிக்கு சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக்காத்துக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் ( எபேசி 4:1-3 ) என்றும் எச்சரிக்கப்படுகிறோம். இயேசுவானவர் குறிப்பிட்ட ' என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ' என்ற சொற்றொடர் சபை அங்கத்தினர் களையும் குறிப்பிடுவதாய் உள்ளது. அவர்கள் மத்தியில் இடறல் மற்றும் பிரிவினை உண்டாகக் காரணமானவர்களுக்கு நரகதண்டனையே முடிவு என்பதை " அவனுக்கு ஐயோ " என்ற பதம் குறிப்பிடுகிறது. இதை உணராமல் சிலர் தாங்கள் இரட்சிக்கப்பட்டதை மறந்து உலகத்தாரைப் போன்ற நடவடிக்கைகளினாலே சபையிலும் நடந்து கொண்டு இடறல் மற்றும் பிரிவினை களுக்குக் காரணமாகிறார்கள். சபையார் இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை யாயிருக்கவே தேவனுடைய வார்த்தை நம்மை அறிவுறுத்துகிறது. சபையார் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் இருக்கவே தேவன் அழைத்திருக்கின்றார். அதைக்கெடுக்கும்படியான பிசாசின் தந்திரங்களுக்கு நாம் எதிர்த்து நிற்க வேண்டும் என எபேசியரில் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சாத்தானின் தந்திரங்கள் நமக்குத் தெரிந்தது தான் என்று 2 கொரி 2:11ல் காண்கிறோம்.

சபையின் ஐக்கியத்தை வலியுறுத்தவே வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம் பிட்கும்படியாக நாம் கூடி வருகின்றோம். அந்த ஒரே அப்பத்தில் சபையார் எல்லோரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான அவர்கள் ஒரே சரீரமாய் இருக்கிறார்கள் ( I கொரி 10:17 ) மற்றும் சரீரத்தின் அவயங்களில் ஒன்றைக் குறித்து ஒன்று அக்கறையாய் இருக்கும் அருமையான உதாரணத்தை கொரிந்தியரின் முதல் நிருபத்தில் 12 ம் அதிகாரத்தில் காண்கின்றோம். தனக்குத்தானே பிரிந்திருக்கும் எந்த ராஜ்ஜியமும் நிலைத்திராது என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஒழுங்காய் இருக்கும் போதே மோசேயும் ஆரோனும் சபைக்கு மேலாகத் தங்களை உயர்த்திக் கொள்வதாக கோராகு கோஷ்டியினர் குற்றஞ்சாட்டி அழிந்தனர். ஆகையால் தான் வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருப்பது தான் ஆவிக்கேற்றபடி நடப்பது என கலா. 5:25,26 ல் காண்கிறோம்.

இப்படியான தெளிவான ஆலோசனைகள் அநேகம் நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் சிலர் இவைகளைக் கவனியாமல் தங்களுடைய சுய பெருமைக்காக சபையில் இடறல் வரக் காரணமாகிறார்கள். " கிடப்பதுகிடக்கட்டும் கிழவனைத் தூக்கி மனையில் வை " என்பது ஒரு கிராமப்புற பழமொழி. அதைப்போல ஐக்கியத்திற்கான ஆலோசனைகளையெல்லாம் புறந்தள்ளி சிலர் சுய பிரயோஜனத்தை முன்னிறுத்துவதால் சபையில் இடறல் உண்டாகிறது. இயேசுவானவரின் உபதேசங்களில் முக்கியமான ஒன்றாகிய சாந்தமும், மனத்தாழ்மையும் கவனித்து அநுசரியாதபடியினால் ஐக்கியம் கேள்விக்குறியாகிறது. பள்ளி வகுப்பில் யார் முதலிடம் பெறுகிறார்களோ அவர்களே பாராட்டுக்குரியவர்கள். ஆனால் சபையில் அப்படியில்லாமல் இயேசுவானவர் சொன்னபடி உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாய் இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ( வேலைக்காரனாய் ) ஊழியக்காரனாயிருக்கக் கடவன் (மத் 20:27 ) இதன் முக்கியக் கருத்து நம்மை நாமே முன்னிலைப்படுத்தாமல் மற்றவர்களுடைய தேவைகளையும் சந்திக்க வேண்டும் என்பதே பவுல் அப்போஸ்தலனும் இதே கருத்தை " ஒவ்வொருவனும் தன் சுய பிரயோஜனத்தைத் தேடக்கடவன் " என்றும் நான் என் சுய பிரயோஜனத்தைக் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி... நடக்கிறது போல நீங்களும் மற்றவருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறல் அற்றவராய் இருங்கள் " I கொரி 10:24,32,33 என்றும் எடுத்துச் சொல்கிறார்.

சபையில் இருப்பவர்கள் அவர்கள் எவ்வளவு காலம் இருந்தாலும் சரி முதலாவது ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; சபையில் நாம் அங்கத்தினர்களாய் இருப்பது நம்முடைய நீதியினால் அல்ல, அது முற்றிலும் தேவனுடைய கிருபையும் அவருடைய ஈவும், இரக்கமுமாயிருக்கிறது. இஸ்ரயேலைத் தெரிந்து கொண்ட தேவனைப் பற்றி மோசே சொல்வதை

கவனியுங்கள், " சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று... உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதி னாலும்... உங்களை மீட்டுக் கொண்டார் (உபா 7:7,8). அதே போல " உன் நீதியினிமித்தமும், உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் அல்ல - கர்த்தர் தம் வார்த்தையை நிறைவேற்றும்படியாக அந்த நல்ல தேசத்தைக் கொடுத்தார் " (உபா 9:5,6) என்கிறார். ஆகவே நாம் நம்மிடத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் " நம்முடைய நீதி " என்பது தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தலாக இருக்கிறது. அதாவது பீரோவில் அல்ல, சமையல் அறையில் உள்ள கரித்துணிக்கு ஒப்பாக நம் நீதி இருக்கிறது. இதை ஒவ்வொருவரும் உணர்ந்தாலே தாழ்மையாய் நடக்கும் சிந்தை உருவாகி சபையில் ஒற்றுமையும் கிறிஸ்துவின் முக்கியத்துவமும் வளர்ந்தோங்கும். ஆனால், சிலர் இதை உணராமல் சபையில் மேட்டிமையான சிந்தையோடு நடக்கும் போது மற்றவர்களை அற்பமாக எண்ணுவதும், பிறரைக் குற்றஞ்சுமத்தி இடறலும், பிரிவினைகளும் உண்டாகக் காரணமாகிறார்கள்.

இவர்கள் தங்களைக் கிறிஸ்துவோடு ஒப்பிட்டுத் தாழ்மையாய், நடவாமல், மற்றவர்களோடு ஒப்பிட்டு, " உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன் (ஏசா 65:5) என்கிறார்கள். ஆனால் " ஒன்றையும் வாதத்தினாலாவது வீண் பெருமையி னாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்கள் என்று எண்ண வேண்டும் " பிலிப் 2:2,3 என்று அப்போஸ்தல உபதேசம் வலியுறுத்துகிறது. ஆகவே 1). சுய நீதி, 2). சுயநலம், 3). மற்றவரை அற்பமாக எண்ணுவது, 4). பிறரைக் குற்றஞ்சுமத்தி அவர்கள் மனதைப் புண் ஆக்குவது போன்ற காரியங்களில் வீழ்ந்து விடாமல் சபையார் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்; மேலும் சிலர் தங்களையே புகழ்ந்து கொண்டு தாங்கள் சரியாய் நடப்பதாக நினைத்துக் கொள்வார்கள். இன்னும் ஒரு படி மேலே சென்று அவர்கள் சபைக்கு வருவதே பெரிய விஷயம் போலவும், அவர்கள் வருவதால் தான் சபைக்கு பெருமை என்பது போலவும் நடந்து கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களாலேயே இடறலும் பிரிவினைகளும் உண்டாகிறது. நாம் ஆண்டவரைப்பற்றித்தான் பெருமை பேசவேண்டும் அவருடைய தயவால் நாம் இருக்கிறோம் என்ற சிந்தை வேண்டும் (2 கொரி 10:17,18) இந்தத் தெளிவு அனைவரிடமும் வரவேண்டும். அதற்கான ஜெபமும், போதனைகளும் சபைக்கு அவசியமாகும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நாம் ரோமர் 14:13 ன் படி ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும், இடறலையும் போடலாகாது என்றே தீர்மானித்துக் கொள்ளுவோம். மேலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாத ஆவிக்கேற்ற நடவடிக்கையே இப்போதைய நம் அவசியமாயிருக்கிறது. தேவ சமாதானம் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ●

12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.




# World Evangelism Gospel Media


Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**



Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**



Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**

P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**

Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thursday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**


Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.**


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


## எங்களது இதர வெளியீடுகள்




















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண். 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.